திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' நீலகிரி மாவட்டம், கூடலூர், உதகை, குன்னூர், கோத்தகிரி வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால், அப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நீலகிரி மாவட்டத்தின் ஓராண்டு சராசரி இயல்பான மழை யளவு 1,920.80 மி.மீ. 1986 ஆம் ஆண்டில் பெய்த சராசரி மழையளவு 1,422.40 மி.மீ. கடந்த ஆண்டு பெய்த மழையளவு குறைவாக இருந்தபோதிலும், முக்கியமான பயிர்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. இருப்பினும், வரும் கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதால், அதனைத் தீர்ப்பதற்கு தேவைப்பட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) நெற்குன்றத்தில் வீட்டு வசதி வாரிய நிலங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சிந்தன் அவர்களுக்குப் பதிலாக திரு. கோ. வீரய்யன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்கள்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, '' வில்லிவாக்கம் தொகுதி, நெற்குன்றம் கிராமம், செல்லி யம்மன் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் 32 ஆதி திராவிடக் குடும்பங்களை வருவாய்த்துறை அதிகாரிகள் மிரட்டி வீடுகளை நாசம் செய்தது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

செங்கல்பட்டு மாவட்டம், சைதை வட்டம், நெற்குன்றம் கிராமத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்காக நில எடுப்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை, முன்னாள் கிராம அதிகாரி மற்றும் சிலரின் தூண்டுதலால், தனியார்கள் சிலர் குடிசைகள் கட்டி, அத்துமீறி ஆக்கிரமணம் செய்திருந்தனர்.

இவ்வாக்கிரமணங்களை நில எடுப்புச்சட்டத்தின்படி, தேவையான வழிமுறைகளைப் பின்பற்றி, வருவாய்த்துறை அலுவலர்களும், மற்றும் வீட்டுவசதி வாரிய அலுவலர்களும் வெளியேற்றியுள்ளனர். செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் தனது அறிக்கையில், அத்துமீறல்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதையும். சேதமோ, இழப்போ, சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஏற்படவில்லை என்பதையும் தெரிவிக்கின்றார்.

(இ) சென்னை புறநகர்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை வரைமுறை செய்யும்போது கிரயம் வசூலித்தல்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''தாம்பரம் மற்றும் புறநகர் பகுதிகளில் முப்பது ஆண்டுகளாக அரசு தரிசு நிலங்களிலுள்ள குடிசைப் பகுதி மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்குவதில் தற்போது உள்ள அரசின் கொள்கைப்படி 3 சென்டுக்கு மேல் உள்ள இடங்களுக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1984-ம் ஆண்டு 30-6-1984 வரை உள்ள ஆட்சேபணையற்ற ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த அரசு உத்திரவிட்டது. செங்கல்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டத்தில் 30-6-1984 வரை 44,891 ஆக்கிரமணங்கள் உள்ளன. இவற்றில், 23,010 ஆக்கிரமணங்கள் 3 சென்டுக்கு மேல் உள்ளது. தற்போதுள்ள அரசு கொள்கைப்படி ஆக்கிரமிப்புதாரர்கள் ஏழைகளாக இருந்தால் 3 சென்ட் வரை இலவச மனைப் பட்டாவும் 3 சென்டுக்கு மேல் உள்ள கூடுதல் நிலங்களுக்கு சென்ட் ஒன்றுக்கு 2 மடங்கு நிலக்கிரயமும் செலுத்த வேண்டும். ஆக்கிரமிப்புதாரர்கள் பணக்காரர்களாக இருந்தால் மூன்று சென்ட் வரை 1 மடங்கு நிலக்கிரயமும், 3 சென்டுக்கு மேல் உள்ள கூடுதல் நிலங்களுக்கு 2 மடங்கிலிருந்து 4 மடங்கு வரை நிலக்கிரயமும் செலுத்த வேண்டும். இவ்விதம் நிர்ணயிக்கப்படும் தொகை சந்தை மதிப்பைவிட அதிகமாக உள்ளதென்றும், ஒப்படைதாரர்கள் மேற்படி நிலங்களுக்கு கிரயம் செலுத்தி பட்டா பெறுவதற்கு தயங்குகிறார்கள் என்றும், இதனால் சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து வசூல் செய்யப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 4.37 கோடியாக உள்ளது என்றும், அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் சென்னை நகரின் புறநகர் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறை செயயும்போது எந்த அடிப்படையில் கூடுதல் நிலத்திற்கான கிரயத்தை வசூலிப்பது என்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.